## அமுதசுரபி தீபாவளி மலர் 2003

# வாழ்த்தப் பிறந்தவன்

**வழக்கறிஞர் கே. ரவி**

உலகம், ஒரு கவிஞனிடம் அதிகம் எதிர்பார்க்கிறது. கவிஞன், மற்றவர்களுக்காகவே வாழ்பவன் என்ற முடிவும், அவன், மற்றவர்களுக்காகவே வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் ஒரு கவிஞனை மிகுந்த தாக்கத்துக்கு உள்ளாக்குகின்றன. அங்கீகரிக்கபடாமலேயே உலகத்துக்கு விதிகள் வகுப்பவன் கவிஞன் என்று உலக மாக்கவிஞர்களில் ஒருவனான ஷெல்லியே அறிவித்துவிட்டான்[1] வேறென்ன வேண்டும்? பாரதியிடமும் கேட்போமே:

வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே[2]
பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப்
பாலித்திட வேண்டும்[3]

இப்படியெல்லாம் கனவு கண்டு, பராசக்தியிடமே கோரிக்கை வைத்தான் பாரதி, “அறிவில்லாது அகிலம் அளிப்பாயோ?”[4] என்று அவன் பராசக்தியிடமே மல்லுக்கு நின்று சண்டையிட்டான்.

ஓர் ஓவியனிடம் ஒரு நடனமணியிடம், ஒரு நடிகனிடம், ஓர் இசைக் கலைஞனிடம் உலகம் இப்படிப்பட்ட எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளதா? இல்லையே? ஏன்? தன்னை மகிழ்விக்கும் மற்ற கலைகளிலிருந்து கவிதைக் கலை வேறுபட்டது என்று மனிதன் ஏன் நினைக்கிறான் ? இதன் அடிப்படைக் காரணம், கவிஞனின் வாக்குத் திறனே என்று எண்ணத் தோன்றுகிறது. பொதுமக்களுக்குப் புரியக்கூடிய வகையில், சமயம் சார்ந்த மொழியில் சொல்ல வேண்டுமென்றால், படைப்புக் கடவுள் எனப்படும் பிரம்ம தேவனின் சக்தியாகக் கருதப்படும் கலைவாணி கவிஞன் நாவிலமர்ந்துகொண்டு படைப்புக்கே விதிகள்

சமைக்கிறாள் என்று சொல்லிப் பார்க்கலாம். அல்லது, அறிவியல் மொழியில் சொல்லவேண்டுமென்றால், உலகம் தோன்றிய அடிப்படை அதிர்வுகளில் அவ்வப்போது முங்கியெழுந்து, அவற்றில் தன் பதிலதிர்வுகளைக் கவிஞன் பதிவு செய்கிறான் என்று கூடச் சொல்லிப் பார்க்கலாம். எப்படிப் பார்த்தாலும், எப்படிச் சொன்னாலும், உலக விதிகளின் ஊற்றுக் கண்ணோடு, அறிந்தோ அறியாமலோ, அவ்வப்போது தொடர்பு கொள்பவன் கவிஞன் எனத் துணியலாம்.

ஒருவன் பிச்சை எடுத்துத்தான் வாழமுடியும் என்ற நிலைமையிருந்தால் உலகைப் படைத்தவனே அழியட்டும் என்று திருவள்ளுவர் சாபமிடுகிறார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.[5]

ஒரு தனிமனிதனுக்கு உணவு இல்லை என்ற நிலையுருவானால் இந்த உலகத்தையே அழித்திடுவோம் என்று பாரதி விதிசெய்து, சூளுரைக்கிறான்.

இனியொரு விதிசெய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.[6]

கவிஞர்கள், உலகத்துக்கே விதிசெய்பவர்கள் என்ற உண்மையை மேற்கண்ட வரிகளே தெளிவாக உணர்த்துகின்றன.

உலகம் எந்த அதிர்வுகளில் தோன்றியதோ அந்த அதிர்வுகளின் ஊற்றுக் கண்ணில் தன் பதிலதிர்வுகளைக் கவிஞன் பதிவு செய்ய முனையும்போதுதான் அவன் மாக்கவிஞன் ஆகிறான். இது ஏதோ ஆணவத்தால் விளைவதில்லை. மற்றவர்களுக்காக உருகும் ஆதங்கத்தால் விளைவது. அதனால்தான் "பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம்" என்று சபதம் செய்த உடனேயே, "பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்" என்று பணிவோடு சொல்கிறான், பாரதி. "நாமார்க்கும் குடியல்லோம்" என்று முழங்கிய அப்பரடிகள், உடனேயே,

இறைவனின் கொய்மலர்ச் சேவடிக்கே மீளா ஆளாய்த் தாம் ஆட்பட்டதையும் அறிவிக்கிறாரே! இறைவனை மகிழ்விக்கவா காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் துதிக்கவேண்டும்? இல்லை. பெயரோ, வடிவமோ இல்லாத அடிப்படை ஆற்றலுக்குப் பெயரும் வடிவமும் தந்து, வணங்கி உருகுவதெல்லாம் நம் ஆணவம் மெல்ல மெல்லக் கரையத்தான். மற்றவர்களுக்காக உருகக் கற்றுக் கொண்டால் அந்த உருக்கமே ஆணவத்தைக் கரைக்க உதவும். அதுவே பக்தி யோகமாகவும் அமையும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலின் உருக்கமும், அழுதால் உன்னைப் பெறலாமே என்று அரற்றிய பக்தியும் வேறுவேறில்லை. இரண்டும் ஒன்றே.

தன் அனுபவ அதிர்வுகளில் மற்றவர்களும் பங்கேற்க வேண்டும் என்ற ஆதங்கமே ஓர் உண்மைக் கலைஞனை உருவாக்குகிறது. அந்தப் பரந்த நோக்கமே எல்லாக் கலைகளுக்கும் அடிப்படை. அதைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுப் போலிப் புகழ்ச்செருக்கால் எழும் தன்முனைப்புக்கு ஒரு கலைஞன் ஆட்படும்போது, கலையே கர்வத்தின் காலடியில் மிதிபட்டுக் கலைகிறது. பழைய கணக்கில் உள்ள பற்றின் காரணமாகப் பிறப்பெடுத்து சங்கிலித் தொடரில் சிக்குண்டுழலும் மனிதன், புதிய பற்று - வரவுக் கணக்குத் தொடங்காமலிருக்க அவனுடைய ஆணவம் எனப்படும் தன்முனைப்பு முற்றிலும் விலக வேண்டும். தன்முனைப்பிலிருந்து விடுபட வேண்டிய மனிதனுக்குத் தன்முனைப்பில் சிக்குண்டிருக்கும் ஒருவன் விதி செய்வது தகுமா? எனவே, எந்தக் கவிஞனும் எந்த நேரத்திலும் தன்முனைப்புக்கு ஆளாகவே கூடாது. காரணம், அவன் உலகத்துக்கே விதிசெய்பவன்.

நெருக்கடி நிலை என்ற பெயரில் மக்களாட்சி முறையே பறிபோகக் கூடிய அச்சத்தில் இந்தியா மூழ்கியிருந்தபோது இயற்றப்பட்ட அடக்குமுறைச் சட்டங்கள் சில, செல்லத்தக்கவையல்ல என்று அறிவிக்கும் பொறுப்பு, உச்சநீதிமன்ற நீதியரசர்களுக்கு இருந்தது. அப்படிப்பட்ட சில தீர்ப்புகளில் கவியரசர்களின் வாக்குகளே மேற்கோள் காட்டப்பட்டன என்பதை எண்ணிக் கவிஞர்கள் எல்லோரும் பெருமைப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக. “மினர்வா மில்ஸ் லிட்

எதிர் இந்திய அரசு" என்ற வழக்கில், நீதியரசர் சந்திரசூட் சொல்வதை நோக்குவோம்.

**தம் நாடு எந்தச் சுதந்திர சொர்க்கத்தில் விழித்துக் கொள்ள வேண்டும் என்று தாகூர் விரும்பினாரோ, அந்தச் சொர்க்கத்துக்கும் வரம்பற்ற எதேச்சாதிகாரம் என்ற அதல பாதாளத்துக்கும் நடுவில் நிற்பவை அரசியல் அடிப்படைச் சட்டத்தின் 14, 19, 21 ஆகிய மூன்றே மூன்று பிரிவுகள் மட்டுமே,7**

கவியரசர் தாகூரின் அமர வரிகள் இவ்வாறு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பில் நினைவு கூரப்பட்டதை ஒவ்வொரு கவிஞனும் எண்ணிப் பார்க்க வேண்டும். இதனால் விளையும் பெருமையைக் காட்டிலும், இதனால் உணரப்படும் பொறுப்புச் சுமையே அதிகம். வெறும் கைத்தட்டல்களுக்காக மட்டும் கவிதைகள் எழுதப்படுவதில்லை என்ற பொறுப்புணர்ச்சியை இது ஏற்படுத்த வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும், எந்த ஆவேசத்தாலும் தரம்தாழ்ந்த அல்லது தரம் தாழ்த்தக்கூடிய சிந்தனைகளோ, சொற்களோ கவிதையில் கலந்துவிடக்கூடாது என்ற வேண்டுதலைத் தூண்டுவது இந்தப் பொறுப்புணர்ச்சிதானே!

தன் கணவனைக் கள்வன் என்று விசாரணையே இன்றி முடிவு செய்து, அவனை அநியாயமாக அரசன் கொன்றுவிட்டதை அறிந்ததும் வெகுண்டெழுந்த கண்ணகியின் வெஞ்சினம், கொழுந்துவிட்டெரிந்தபோதும், "பார்ப்பார், அதாவது செந்தண்மை பூண்டொழுகும் மெய்ஞானிகள், அறவோர், பசுக்கள், பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழந்தைகள் ஆகியோரை விலக்கித் தீயவர்களை மட்டுமே சுடு"8 என்று அவள் நெருப்புக்கே கட்டளையிட்டதாக இளங்கோ அடிகள் சொல்லும்போது இந்தப் பொறுப்புணர்ச்சிதானே வெளிப்படுகிறது! உலகத்தை இயற்றியவன் அழியட்டும் என்று திருவள்ளுவரும், உலகத்தையே அழித்திடுவோம் என்று பாரதியும் சொன்னபோது இந்தப் பொறுப்புணர்ச்சி வெளிப்படவில்லையே என்று கேட்கத் தோன்றுகிறதா? அவர்கள் கவிஞர்களாகப் பேசுகிறார்கள்; அதுவும் உலகத்துக்கே விதி செய்யும் நிலையிலிருந்து

பேசுகிறார்கள். அவர்கள் அப்படிப் பேசும் உரிமையுடையவர்கள். ஆனால் சிலப்பதிகாரத்தில் நெருப்புக்கு கட்டளையிடுபவர் இளங்கோ அடிகளா? இல்லை. அங்கே கண்ணகி என்ற பெண் கட்டளையிடுவதாகக் காப்பியம் சொல்கிறது. உலகத்துக்கே விதி செய்யும் உரிமை அந்தப் பெண்ணுக்கு இல்லை. அவளைப் பெண் தெய்வம் என்றே கொண்டாலும் அவளுக்கு அந்த உரிமையில்லை. தெய்வத்துக்குக்கூட இல்லாத அந்த உரிமை, ஒரு கவிஞனுக்கு உண்டு. அந்த உரிமையே கவிஞனுக்கு மிகப்பெரிய பொறுப்புச் சுமையையும் தருகிறது. மேலும், தக்க விசாரணையின்றிக் கோவலன் தண்டிக்கப்பட்டது. ஒரு தனி மனிதனுக்கு இழைக்கப்பட்ட அநீதி. அதுவும், பாண்டிய அரசன் நெடுஞ்செழியன் என்ற தனிமனிதன் இழைத்த அநீதி. ஆனால் ஒருவனுக்கு உணவின்றி அவன் பிச்சையெடுத்துத்தான் உண்ண முடியும் என்ற நிலைமை இருப்பது ஒரு தனிமனிதனுக்கு, இன்னொரு தனி மனிதனால் இழைக்கப்படும் அநீதியில்லை. அது ஒரு சமூக அநீதி. இந்த வேறுபாட்டையும் மனத்தில் கொண்டால், திருவள்ளுவரும், பாரதியும் வெகுண்டுரைத்தவாறு கண்ணகி சொல்ல இயலாததற்குக் காரணம் தெளிவாகும்.

இப்பொழுது இன்னொரு காட்சியை மனத்திரையில் ஓடவிடுவோம். பொருளீட்டும் பொருட்டுத் தன்னைப் பிரிந்து வேற்றூர் செல்லக் காதலன் தயாராக இருக்கிறான். எப்படி காதலியைத் தேற்றி விடைபெறுவது என்ற குழப்பத்தோடு அவன் காதலியை அணுகி அவளிடம் தான் சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல் தடுமாற்றத்தோடு நிற்கிறான். அப்போது காதலி என்ன சொல்ல வேண்டும்? "போகாதே, போகாதே. நீ போனால் நான் செத்துப்போய்விடுவேன்" என்று ஒப்பாரி வைத்தால் எப்படியிருக்கும்? அதே சூழ்நிலையில், அந்தக் காதலி தன் காதலனிடம் இப்படிச் சொன்னால் அது எவ்வளவு நயமாக இருக்கும்.

நீ என்னிடம் சொல்லிக் கொண்டு போக முயன்று திணறுகிறாய்? நீ திரும்பி வரும்போது யார் உயிருடன் இருக்கப்போகிறார்களோ அவர்களிடம் சொல்லிக் கொண்டு போவதுதானே?

*செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்*
*வல்வரவு வாழ்வார்க் குரை*

இப்படியொரு காதலியைத்தான் திருவள்ளுவர் காட்டுகிறார். எவ்வளவு எச்சரிக்கையோடு இந்தக் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. கவிஞரின் பொறுப்புணர்ச்சி எப்படி வெளிப்படுகிறது?

தாயின் கட்டளையைத் தலைமேற்கொண்டு மரவுரி தரித்துத் தவக்கோலத்தில் கானகம் செல்லும் ராமபிரானையும், சீதாபிராட்டியையும் சித்தரிக்கும்போது கவிச்சக்கரவர்த்தி கம்பர் இதே பொறுப்புணர்ச்சியை எப்படி வெளிப்படுத்துகிறார் என்பதை பார்ப்போம்:

காட்டில் ஒரு மாலைப்பொழுது இரைதேடுவதிலேயே அதுவரை முனைப்பாக இருந்த பறவைகளும், விலங்குகளும் கூடு திரும்பத் தொடங்குகின்றன. வேலை முடிந்து வீடு திரும்பும்போதுதானே பொதுவாக இல்லற வாழ்வின் இன்ப நினைவுகள் மேலோங்கும்? குரங்கினத்தைச் சேர்ந்த பெண்மந்திகளும், ஆண் கடுவன்களும் மரங்களை நோக்கி சென்றனவாம். ஆண் யானைகளான தந்திகளும், பெண் யானைகளான பிடிகளும் குழியாக உள்ள தடங்கள் நோக்கிச் சென்றனவாம். குற்றமில்லாத பறவைகளோ நீளம் எனப்படும் தொலைவை நோக்கினவாம். ஏன் இவ்வாறு மூன்று எடுத்துக்காட்டுகள் சொல்லப்பட்டன? குரங்கினத்தில் பெரும்பாலும் பெண் குரங்குகளான மந்திகளே ஆண் குரங்குகளான கடுவன்களை உடலுறவு கொள்ள வேண்டித்தொடரும். யானைகளில் ஆண் யானைகளே பெண் யானைகளைத் தொடரும். சகுந்தங்கள் எனப்படும் பறவைகளில் இப்படியில்லை. ஆண், பெண் வேற்றுமை என்ற குற்றம் அல்லது நிந்தையின்றி அவை ஒன்றாகவே இணைந்து காதல் விளையாட்டில் ஈடுபடும். இப்படி உயிரினம் அனைத்தும் காதல் விளையாட்டில் ஈடுபடும் வேளையாக அந்திப்பொழுது மலர்கிறது. இதை ராமபிரான் பார்க்கிறார். வெறும் உணர்வு நிலையில் இயங்கும் மற்ற உயிரினங்களைப் போலன்றி அறிவு நிலையிலும் இயங்கும் மனிதனாக அவதாரம் எடுத்து வந்துள்ள நிலையில், தாயின் கட்டளைப்படித் தாம் தவக்கோலத்தில் கானகம் சென்றுள்ள நிலையில்,

அவர் என்ன செய்தார்? அரிவையை நோக்காமல் அறிவை நோக்கினார். கைகளும், கண்களும் குவித்து மாலைப் பொழுதுக்குரிய வணக்கத்தில், தியானம் எனப்படும் உள்நோக்கில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். அவருடன் சேர்ந்து பிராட்டியும், இலக்குவனும் அப்படியே செய்தனர்.

இதைக்கூட எவ்வளவு அழகாகச் சொல்கிறார் கம்பர்! காலையில் மலர்ந்த தாமரைப்பூ முதலான சில பூக்கள் மாலையில் இதழ்களை மூடிக்கொண்டு குவிந்து கொள்ளும். மாலையில் சில மலர்கள் புதிதாகப் பூத்து இதழ் விரியும். ராமபிரானுக்கும் மற்ற இருவர்க்கும் கைகளும் கண்களும் கமலமாகிய தாமரைப்பூவை ஒத்தன என்கிறார், கம்பர். அதாவது, மாலையில் குவிந்துகொள்ளும் தாமரைப்பூவைப் போல் அவர்களுடைய கைகளும் கண்களும் குவிந்து கொண்டனவாம்.

"மந்தியும் கடுவனும் மரங்கள் நோக்கின
தந்தியும் பிடிகளும் தடங்கள் நோக்கின
நிந்தையில் சகுந்தங்கள் நீளம் நோக்கின
அந்தியை நோக்கினான் அறிவை நோக்கினான் [10]
மொய்யுறு நறுமலர் முகிழ்ந்த வாம்சில
மையறு நறுமலர் மலர்ந்த வாம்சில
ஐயனோ டிளவர்க்கும் அமிழ்த னாளுக்கும்
கைகளும் கண்களும் கமலம் ஒத்தவே" [11]

எந்தச் சூழ்நிலையிலும் கவிஞன், உலகத்திடம் தனக்குள்ள மிகப்பெரிய பொறுப்பிலிருந்து இம்மியும் விலகிவிடக்கூடாது. உலகை வாழ்த்தி, உயர்த்தி வாழ்விக்கும். மிகப்பெரிய பொறுப்பு. கவிஞனுக்கு உண்டு. அவன் வாழ்த்துகளை, படைப்பின் ஊற்றுகண்ணே ஞான ஆகாசத்திலிருந்து எதிரொலித்து "அங்ஙனே ஆகுக" என்று அருள்பாலிக்கும், அண்ணல் காந்தியடிகளை முதன்முதலில் "காந்தி மகாத்மா நீ வாழ்க வாழ்க" என்று ஒரு மாக்கவிஞன் வாழ்த்தியதால்தானே அது பலித்து, "மகாத்மா" என்ற பட்டமே நம் தேசத்தந்தைக்கு நிலைத்துவிட்டது. வாழ பிறக்காவிட்டாலும் வாழ்த்தி,

வாழ்விக்கப் பிறந்தவன், கவிஞன். யோகிகளும், மெய்ஞானிகளும், கவிஞர்களும் அவ்வப்போது பிறப்பதாலேயே, உலகம் இன்னும் இருக்கிறது **உண்டால் அம்ம இவ்வுலகம் . . . . !**


1. ஷெல்லி, A Defence of Poetry, Gateway to Great Books, Vol. V, Critical Esssays, Encycl. Brit. Inc., 1963 at page 242.
2. பாரதி, பாரதி பாடல்கள், ஆய்வுப்பதிப்பு, தமிழ்ப் பல்கலை, தஞ்சை, 2ஆம், பதி., பக்கம் 579.
3. பாரதி, பாரதி பாடல்கள், ஆய்வுப்பதிப்பு, தமிழ்ப்பல்கலை, தஞ்சை, 2ஆம் பதி., பக்கம் 566.
4. பாரதி, பாரதி பாடல்கள், ஆய்வுப்பதிப்பு, தமிழ்ப்பல்கலை, தஞ்சை, 2ஆம் பதி., பக்கம் 321.
5. திருவள்ளுவர், திருக்குறள், குறள் எண் 1062.
6. பாரதி, பாரதி பாடல்கள், ஆய்வுப்பதிப்பு, தமிழ்ப்பல்கலை, தஞ்சை, 2ஆம் பதி., பக்கம் 545.
7. ஏ.ஐ.ஆர். 1980 உச்சநீதிமன்றம் 1789 (AIR 1980 SC 1789)
8. இளங்கோ அடிகள், சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், வஞ்சினமாலை, வரிகள் 53 – 55.
9. திருவள்ளுவர், திருக்குறள், குறள் எண் 1151.
10. பாடல் எண் 768, அயோத்யா காண்டம், கம்பராமாயணம், வர்த்தமானன் பதிப்பகம்.
11. பாடல் எண் 769, அயோத்யா காண்டம், கம்பராமாயணம், வர்த்தமானன் பதிப்பகம்.